இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

# 1983 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம்

*[1983, சனவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1983, சனவரி மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 45* *தபாற் செலவு : சதம் 50*

**1983 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம்**

*[1983, சனவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

ச. வ.—ஓ. 82/80 / 1401

**1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1983 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கான விரிவுப் பெயரானது "உடைமைக்கும், விற்பனைக்கும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "உடைமைக்கும், விற்பனைக்கும், இடம் பெயர்த்தலுக்கும்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கான விரிவுப் பெயரைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் பாகத்தின் தலைப்பானது, "உடைமையையும், விற்பனையையும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "உடைமையையும், விற்பனையையும், இடம்பெயர்த்தலையும்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் பாகத்தில் தோன்றுகின்ற தலைப்பைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அல்லது அத்தகைய உரிமம் பெற்ற வியாபாரியின் சார்பில் அல்லது பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளரின் சார்பில் செயற்படும் ஆளொருவர்" என்ற சொற்களுக்குப் பதிலாக "அல்லது அத்தகைய உரிமம் பெற்ற வியாபாரியின் சார்பில் அல்லது பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளரின் சார்பில் செயற்படுவதற்கு எழுத்தில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலும் (3) ஆம் உட்பிரிவிலும் "அல்லது அத்தகைய உரிமம் பெற்ற வியாபாரியின் சார்பில் அல்லது பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளரின் சார்பில் செயற்படும் ஆளொருவர்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "அல்லது அத்தகைய உரிமம்பெற்ற வியாபாரியின் சார்பில் அல்லது பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளரின் சார்பில் செயற்படுவதற்கு எழுத்தில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

ல 60528 —6,950 (11/82)

முதன்மைச் சட்டவாக்கத்தில் 16அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 16அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" தேயிலையை இடம்பெயர்த்தல்.

16அ (1) தயாரிக்கப்பட்ட தேயிலையில் உரிமம் பெற்ற வியாபாரி ஒருவர், அல்லது பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளர் ஒருவர் அல்லது அத்தகைய உரிமம்பெற்ற வியாபாரியின் சார்பில் அல்லது பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளரின் சார்பில் செயற்படுவதற்கு எழுத்தில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் தவிர்ந்த ஆளெவரும் விதித்துரைக்கப்பட்ட அளவுக்கு அதிகமான ஏதேனும் அளவான தயாரிக்கப்பட்ட தேயிலையை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு இடம்பெயர்த்தலோ அல்லது இடம்பெயர்க்கச் செய்தலோ ஆகாது :

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும், பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளரொருவரல்லாத, பதிவுசெய்யப்பட்ட தோட்டமொன்றின் அல்லது சிறுபற்று நிலமொன்றின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரை, அத்தோட்டத்தின் அல்லது சிறுபற்று நிலத்தின் விளைபொருளான பச்சைத் தேயிலைக் கொழுந்திலிருந்து பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளரொருவரால் அவருக்காக உற்பத்தி செய்யப்பட்ட தயாரிக்கப்பட்ட தேயிலையின் ஏதேனும் அளவை இடம் பெயர்ப்பதிலிருந்து அல்லது இடம் பெயர்க்கச் செய்வதிலிருந்து தடுப்பதாகக் கருதப்படுதலாகாது.

(2) பச்சைத் தேயிலைக் கொழுந்தின் உரிமம் பெற்ற வியாபாரி ஒருவர் அல்லது பதிவுசெய்யப்பட்ட தோட்டமொன்றின் அல்லது சிறுபற்று நிலமொன்றின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் அல்லது பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர் ஒருவர் அல்லது அத்தகைய உரிமம் பெற்ற வியாபாரியின் சார்பாக, பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரின் சார்பாக அல்லது பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளரின் சார்பாகச் செயற்படும் ஆளொருவர் தவிர்ந்த ஆளெவரும், ஏதேனும் அளவினதான பச்சைத் தேயிலைக் கொழுந்தை இடம்பெயர்த்தலோ அல்லது இடம்பெயர்க்கச் செய்தலோ ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலும் (2) ஆம் உட்பிரிவிலும் " அல்லது அத்தகைய பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளரின் சார்பில் அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் சார்பில் செயற்படும் ஆளொருவர் " என்ற சொற்களுக்குப் பதிலாக " அல்லது அத்தகைய பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளரின் சார்பில் அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் சார்பில் செயற்படுவதற்கு எழுத்தில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் " என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலும் (2) ஆம் உட்பிரிவிலும் "அல்லது அத்தகைய பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளரின் சார்பில் அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் சார்பில் செயற்படும் ஆளொருவர்" என்ற சொற்களுக்குப் பதிலாக "அல்லது அத்தகைய பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளரின் சார்பில் அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் சார்பில் செயற்படுவதற்கு எழுத்தில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"இச்சட்டத்தின் கீழான தவறுகளுக்கான தண்டனை.

45. (1) இச்சட்டத்தின் கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியான ஆளொவ்வொருவரும், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டிற்கு மேற்படாதவொரு காலத்திற்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும், (நீதிவானொருவர், அவரது சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடியதான குற்றப்பணத்தின் அளவை அக்குற்றப்பணம் விஞ்சுவதாக இருப்பினும்) ஆளாதல் வேண்டும்.

(2) தவறொன்றிற்காக ஆளெவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், நீதிவானனவர் அவர் விதிக்கக்கூடியவாறான ஏதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக—

(அ) தவறானது, 15 ஆம் பிரிவை, 16 ஆம் பிரிவை, 16அ என்னும் பிரிவை அல்லது 19 ஆம் பிரிவை, 20 ஆம் பிரிவை, 43 ஆம் பிரிவை அத்துடன் 44 ஆம் பிரிவை மீறுகின்ற ஒன்றாக இருக்குமிடத்து, எந்தத் தயாரிக்கப்பட்ட தேயிலை அல்லது பச்சைத் தேயிலைக்கொழுந்து தொடர்பாக தவறு புரியப்பட்டதோ அந்தத் தயாரிக்கப்பட்ட தேயிலை அல்லது பச்சைத் தேயிலைக்கொழுந்து அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம்; அத்துடன்

(ஆ) தவறானது, 16அ என்னும் பிரிவை மீறுகின்ற ஒன்றாயிருக்குமிடத்து, தயாரிக்கப்பட்ட தேயிலை அல்லது பச்சைத் தேயிலைக் கொழுந்து எந்த வாகனத்தில் இடம்பெயர்க்கப்பட்டதோ அல்லது இடம்பெயர்க்க எத்தனிக்கப்பட்டதோ அந்த வாகனம் அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

" தவறுகளை இணக்குதல்.

48. ஆணையாளரானவர், வழக்கின் சூழ்நிலைகளில் அவர் நீதியானதும் ஒப்புரவானதுமெனக் கருதுகின்ற விடத்து—

(i) பதினைந்தாம் பிரிவின்கீழும், 16 ஆம் பிரிவின் கீழும், 16 அ என்னும் பிரிவின்கீழும் 19 ஆம் பிரிவின்கீழும், 20 ஆம் பிரிவின்கீழும், 43 ஆம் பிரிவின்கீழும் அத்துடன் 44 ஆம் பிரிவின்கீழும் புரியப்பட்ட தவறுகள் தொடர்பில், எந்தத் தயாரிக்கப்பட்ட தேயிலை அல்லது பச்சைத் தேயிலைக் கொழுந்து தொடர்பாகத் தவறு புரியப்பட்டதோ அந்தத் தயாரிக்கப்பட்ட தேயிலையின் அல்லது பச்சைத் தேயிலைக் கொழுந்தினது அளவின் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறான சந்தைப் பெறுமானத்தின் இருமடங்கிற்குச் சமனானவொரு பணத் தொகையொன்றைத் தவறாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதன்மூலமும் ; அத்துடன்

(ii) ஓராம் பந்தியில் குறிப்பிட்டவை தவிர்ந்த எவையேனும் தவறுகள் தொடர்பில் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததான பணத்தொகையொன்றைத் தவறாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதன்மூலமும்,

இச்சட்டத்தின்கீழ் தவறெதனையும் இணக்கலாம் :

ஆயின், ஏதேனும் தவறுதொடர்பில், சட்ட நீதிமன்றமொன்றில் ஏலவே வழக்கொன்று தொடரப்பட்டிருக்குமிடத்து, ஆணையாளரானவர் நீதிவானின் சம்மதத்துடன் மட்டுமே அத்தகைய தவறை இணக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவானது, " நியமித்த தேதி " என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

' " ஆணையாளர் " என்பது, 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தினால் தேயிலை ஆணையாளராக இருக்கவென அல்லது கடமையாற்றவென நியமிக்கப்பட்ட ஆளொருவர் எனப் பொருள்படும்.'.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200, ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.